# பன்முக நோக்கில்
# தமிழ் இலக்கியம்




பதிப்பாசிரியர்

முனைவர் த. கீதாஞ்சலி

நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி (தன்னாட்சி)

வைரவிழாவை முன்னிட்டு

தமிழ்த்துறை (சுயநிதி)

நடத்திய

Dr. P. MAHESWARI
Associate Professor
Dept. of Tamil
N.G.M. College, Pollachi.

பன்முக நோக்கில்

# தமிழ் இலக்கியம்

பன்னாட்டுக் கருத்தரங்கம் - 2018

கட்டுரைத் தொகுப்புகள்

பதிப்பாசிரியர்

**முனைவர் த. கீதாஞ்சலி**

பதிப்புக்குழு

**முனைவர் த. பரமேசுவரி**

**முனைவர் இரா. விஷ்ணுப்பிரியா**

**முனைவர் ம. சித்ரகலா**

**முனைவர் ந. பிரகாஷ்**

**முனைவர் மு. சுகந்தி**

**முனைவர் ந. ஜெயசுதா**

**முனைவர் இரா. ஜெயந்தி**

**பேரா. ர. சூர்யா**

Estd : 1957

**தமிழ்த்துறை (சுயநிதி)**

**நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி (தன்னாட்சி)**

(தேசிய மீள்தர மதிப்பீடு & மதிப்பேற்றுக் குழுவின் 'ஏ' தகுதி,

ஐ.எஸ்.ஓ. 9001-2015 தரச்சான்றிதழ் பெற்றது)

பொள்ளாச்சி - 642 001.

**பன்முக நோக்கில் தமிழ் இலக்கியம்**
(பன்னாட்டுக் கருத்தரங்கம்)

பதிப்பாசிரியர் : முனைவர் த. கீதாஞ்சலி

பதிப்புரிமை : பதிப்பாசிரியர்

முதற்பதிப்பு : ஜூலை 2018

வெளியீடு : தமிழ்த்துறை
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி
பொள்ளாச்சி - 642 001.

பக்கங்கள் : 244

விலை :

அச்சிட்டோர் : காவேரிடெக் கணிப்பொறி அச்சுக்கூடம்
21/2, ராஜாமில் ரோடு, பொள்ளாச்சி.

**ISBN No. : 9789387009271**

**PANMUKA NOKKIL THAMIZH ILAKKIYAM**
(International Seminar)

Editor : Dr. T. Geethanjali

Copyright's : Editor

First Edition : July 2018

Published : Tamil Department
Nallamuthu Gounder Mahalingam College,
Pollachi - 642 001.

Pages : 244

Price :

Printing at : Cauveritech Computerised Print Shop
21/2, Rajamill Road, Pollachi.

# பொருளடக்கம்

1. சங்கதி நாவலில் 'பெண்' - பாமா 15
- திருமதி கா. அமுதா

2. அறிஞர் அண்ணாவின் நாடகங்களில் கருத்து விளக்கக் கதை மாந்தர்கள் 19
- வ. அண்ணாதுரை

3. பன்முக நோக்கில் - நாட்டுப்புற இலக்கியம் 24
- அ. அருணகிரிவேலவன்

4. ஜெயகாந்தன் சிறுகதைகள் - ஒருபார்வை 28
- பா. பௌத்தராதேவி

5. Biblical Abraham: Forerunner of our Tradition 31
- Mrs. Nandhini Rajiv

6. எட்டுத் தொகையில் நன்னிமித்தங்கள் 35
- திருமதி டே. மெர்லின் ராஜ பெமிலா

7. தாலாட்டுப் பாடல்களில் உளவியல் 40
- முனைவர் ம. சித்ரகலா

8. சங்க இலக்கியம் காட்டும் வாணிகமுறைகள் 49
- முனைவர் ச. புனிதா

9. புதுக்கவிதைகளில் சமூக எதார்த்தங்கள் 55
- முனைவர் பே. மஹேஸ்வரி

10. பன்னிருதிருமுறைகளில் சமூக அறங்கள் 61
- முனைவர் த. கீதாஞ்சலி

11. பதினெண்கீழ்க்கணக்கு அறநூல்களில் தாய் - சமூகமதிப்பு 66
- முனைவர் மா. ஞானமணி

# 4 ஜெயகாந்தன் சிறுகதைகள் - ஒருபார்வை

**பா. பௌத்தராதேவி**
ஆய்வியல் நிறைஞர்,
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி.

## முன்னுரை

இக்கால இலக்கியங்கள் பெரும்பாலும் சமுதாயச் சிந்தனையோ படைக்கப்படுகின்றன. அதிலும் தமிழ்ச் சிறுகதை இலக்கிய வரலாற்றி தமக்கென ஒரு தனியிடம் பெற்றவர் ஜெயகாந்தன். சிறுகதை மன்ன என்றும் பாராட்டப் பெற்றவர். அவரது படைப்புகள் பற்றி ஆராய்வ இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## சிறுகதை இலக்கணம்

சிறுகதை இப்படி அமைய வேண்டும் என்று திட்டவட்டமா வரையறுக்க இயலாது ஏனெனில் அந்த வரையறையை மீறி ஏதாவ ஒரு சிறுகதை பிறந்து விடலாம். கதைக்குப் பின்னேயுள்ள கதாசிரியரி கலையாற்றல், கற்பனைத் திறன் சொல்லாட்சி, அவர் சொல்ல விரும்பு செய்தி இவ்வளவும் இலக்கண வரம்புகளை விடவும் மிக மி முக்கியமானவை, சிறந்த சிறுகதை ஆசிரியர்கள் எந் இலக்கணத்தையும் மனதில் நினைத்துக் கொண்டு எழுதுவதில்லை அவர்கள் எழுத்துக்கள் தாமாகவே சிறுகதை வடிவம் பெற்று விடுகின்ற

## ஜெயகாந்தன் பற்றி ஓர் அறிமுகம்

தமிழ் மக்களின் இலக்கிய ரசனையையும் சிந்தனையையும் பாதித் எழுத்தாளர்களில் ஜெயகாந்தனும் ஒருவர். இவர் நவீன இலக்கிய அரசியல், கலை மற்றும் பத்திரிகை உலகில் கடந்த ஐம்ப ஆண்டுகளாகத் தீவிரமாகச் செயல்பட்டு வருபவர். ஜெயகாந்தன் கதைக இலக்கியத் தரமும் ஜனரஞ்சகமும் உடையனவாகத் திகழ்கின்றன.

## எழுதிய நூல்கள்

ஜெயகாந்தன் 13 சிறுகதைத் தொகுதிகள் எழுதியுள்ளார். ஒ பிடி சோறு (1958) இனிப்பும் கரிப்பும் (1960) தேவன் வருவார

(1961) மாலைமயக்கம் (1962) சுமைதாங்கி (1962) யுகசந்தி (1963) உண்மைசுடும் (1964) புதியவார்ப்புகள் (1965) சுய தரிசனம் (1967) இறந்த காலங்கள் (1969) குருபீடம் (1971) சக்கரம் நிற்பதில்லை (1973) புகை நடுவினிலே (1990) உதயம் (1996) அவர்கள் உள்ளே இருக்கிறார்கள் (1972)

## கதைக்கரு

ஜெயகாந்தனின் கதைகள் பெரும்பாலும் ஏழை மக்களின் வாழ்க்கைப் பிரச்சினையையே கருப்பொருளாகக் கொண்டிருந்தன. ஓர் ஆப்பக்காரிக்கு என்ற கதை அடைந்துள்ளது. பிச்சைக்காரியின் தன்மானத்தைக் கருவாக என்ற கதைகள் உழைக்கும் வர்க்கத்தின் வாழ்வியல் போராட்டங்களைக் கருவாகக் கொண்டிருந்தன. அடுத்து வந்த கதைகள் திரஸ்காரம், பௌருஷம், பால்பேதம் என்பன பெண்களின் பிரச்சினைகளைக் கருவாகக் கொண்ட கதைகளாகும்.

ஒரு பிடி சோறு, உண்மை சுடும் போன்ற கதைத் தொகுதிகளில் உள்ள கதைகள் மார்க்கிசிய அரசியல் சித்தாந்தங்களைக் கதைக் கருக்களாகக் கொண்டுள்ளன.

ஒரு பகல் நேரப் பாசஞ்சர் வண்டியில் என்ற கதை கீழ்க் குலத்திலே பிறந்த அம்மாசிக் கிழவனிடத்திலே ஒரு பிராமணமாது தன் குழந்தையை வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்வதாகவும் கதை அமைகிறது. மனிதத்துவ உணர்வுகளுக்கு முன்னால் ஜாதி நிற்காது என்பதே இக்கதையின் கருவாகும். ஜெயகாந்தன் மாறிவரும் சமுதாயப் போக்கிலும் காலவேகத்திலும் சாதியப் பிரிவுகள் அழிய வேண்டும் என்ற நோக்கோடு இக்கதையைப் படைத்துள்ளார்.

## ஜெயகாந்தனின் சமுதாயப் பார்வை

ஜெயகாந்தனின் கதைகள் அவரே சொல்வது போல சமுதாயத்தை வெளிப்படுத்திக் காட்டும் கருவியாய், கண்ணாடியாய், ஓவியமாய் அமைந்திருக்கின்ற சமுதாயத்தில் அடக்கப்பட்டவர்கள், சுரண்டப்பட்டவர்கள், அநீதிக்கு உள்ளானவர்கள் ஆகியோர் பக்கம் சார்ந்து தன் படைப்புகளைத் தந்துள்ளார் ஜெயகாந்தன். சமூகத்தில் உள்ள பழைய பழக்க வழக்கங்களையும் சமூக முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக உள்ள கருத்துக்களையும் வன்மையாகத் தன் கதைகள் மூலம் கண்டித்துள்ளார்.

## பெண்ணியச் சிக்கல்கள்

பெண்களைப் பற்றிய ஜெயகாந்தன் சிந்தனைகளை அவரு படைப்புகள் முழுவதிலும் பார்க்க முடியும். அனைத்து மதங்களு கோட்பாடுகளும் பெண்களை அடிமைப்படுத்த முனைகின்றன என்பதை பிம்பம், ஆளுகை என்ற கதை மூலம் ஜெயகாந்தன் நிறுவியுள்ளா பெண்களைச் சுய சிந்தனை உடையவர்களாக தமக்குச் சரி என் பட்டதைத் தைரியமாகச் செய்பவர்களாக அறிவாற்றல் உடையவர்களா வேறு சில சிறுகதைகளில் படைத்துள்ளார்.

பௌருஷம் என்ற கதையிலும் முறைப் பெண்ணைத் தாலிகட்டி பட்டணத்துக்கு அழைத்துச் சென்றரிக் சாக்காரக் கணவன் மனைவின விபசாரத்தில் ஈடுபடுத்த முயன்றபோது அவள் புருஷனின் கன்னத்தி அடித்து விட்டு ஊருக்குத் திரும்பி வந்து விடுகிறாள். "அவனும் ஒ ஆம்பிளையா? அவன் ஆம்பிள்ளையா இருந்தா இல்லே அவனுக் நான் பொண்டாட்டியா இருக்க?" என்று ஆவேசத்தோடு கூறுகிறாள்.

கற்பு நிலை என்ற கதையில் ராஜம் என்ற பெண்ணை மணந் சங்கரன், வேறொரு பெண்ணுடன் தொடர்பு கொள்கிறான். அவ நெடுநாள் கழித்து ராஜம் வீட்டிற்குத் திரும்பி வரும்போது அவளுடை தங்கை மீனா திருமணம் ஆகாமலே விதவைக் கோலத்தில் இருப்பதை பார்க்கிறான். அதைக் கண்டு அதிர்ந்த சங்கரன் "இது என்ன கோலம் என்று கேட்க தனக்குத் திருமணம் பேசப்பட்டு கணவனா வரப்போகிறவன் திடீரென்று இறந்து விட்டதால் தான் கன்னியாகவே விதவைக் கோலம் ஏற்றுக் கொண்டதாகக் கூறுகிறாள். திருமண என்ற சடங்கோ, சாஸ்திரமோ, சாதியோ, சட்டமோ ஓர் ஆணின் ஒழுக்கத்தைப் பாதுகாக்கவில்லை. ஒரு பெண்ணின் ஆன்மீ வாழ்க்கைக்கும் உத்திரவாதம் இல்லை என்ற கருத்தை இக்கதை மூலம் தெரிவிக்கின்றார் ஜெயகாந்தன் இவ்வாறு ஆணாதிக்கப் போக்கை எதிர்த்துப் பெண்களையே தம் கதைகளில் வாதிட வைத்துள்ளார்.

## முடிவுரை

தமிழ்ச் சிறுகதைப் படைப்பில் ஜெயகாந்தனின் பங்களிப் வரலாற்றுச் சிறப்புடையது. தமிழ் சிறுகதை வரலாற்றில் ஜெயகாந்தன் பதித்துள்ள தடம் ஆழமானதும் அகலமானதும் தனித்துவம் வாய்ந்தது சிறப்பானதும் ஆகும்.



ISBN 9789387000271